Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன் 89 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 11 ஆம் நாள் துல்ஹஜ் 10 (23-4-64 வியாழக்கிழமை இதழ் 72

**ஈழநாடு**
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# பிரதமர்-ஜி. ஜி. சந்திப்பு

## தமிழர் பிரச்னைபற்றி ஆலோசனை

### நுவரெலியில் என். எம்.; பேச்சுக்கள் நடத்த தமிழரசுக்கட்சியும் தயார்

கொழும்பு, புதன்

**தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை நுவரெலியில் சந்தித்துத் தற்போதைய அரசியல் சூழ்நிலைபற்றியும், தமிழ்மக்களின் நிலைபற்றியும் ஆராய்ந்தார்.**

**இதேசமயம் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடம் அரசாங்கத்தின் நடவடிக்கையொன்றை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுடன், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராயிருப்பதாகவும் கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துடன் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கான பொதுக்கொள்கைத் திட்டம் பற்றிப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா நாளை வியாழக்கிழமை நுவரேலியா போய்ச் சேருவாரென இன்னுமொரு செய்தி கூறுகிறது. சமசமாஜக் கட்சியின் பொதுககாரியதரிசி திரு லெஸ்லி குணவர்த்தன கூட்டு அரசாங்க அமைப்புப் பற்றிச் சென்ற வெள்ளிக்கிழமை பிரதமரைச் சந்தித்துப் பேசினர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நுவரெலியில் விடுமுறையைக் கழித்துக்கொண்டிருக்கும் பிரதமரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினரென நுவரெலியாவிலுள்ள எம். பி.க்கள் தெரிவித்ததாக அங்கிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது. திரு. பொன்னம்பலம் பிரதமருடன தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றியும், அரசாங்கத்தின் போக்கு பற்றி வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்மக்கள் எவ்வித அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள் என்பது பற்றியும் ஆராய்ந்ததாக நுவரெலியாவிலுள்ள எம். பி.க்கள் தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் நடவடிக்கை ஒன்றைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அரசாங்கம் தங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அதில்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஷேக்ஸ்பியர் பிறந்ததினம்

கொழும்பு, புதன்

நாளை மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியரின் 400-வதுபிறந்த தினமாகும். ஷேக்ஸ்பியரின்பிறந்ததினத்தை உலகின் பலபகுதிகளிலும் விரிவான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் கொழும்பு கலாபவனத்தின் ஆதரவில ஒரு கூட்டம் நடைபெறும். இக்கூடடத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மூன்று அறிஞர்கள் பேருரை நிகழ்த்துவார்கள். கூட்டத்தில் மகாகவி ஷேக்ஸ்பியரின் படைப்பான ரோமியோ ஜூலியட் நாடகமும் நடைபெறும். கண்டியிலும் பல நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன;

மகாகவிஞரை நினைவுகூரும் முகமாக நாளைய தினம் இலங்கை வானொலி, மும்மொழிகளிலும் பல நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்.

## இலங்கைக்கு இந்தியா நன்றி தெரிவித்தது

கொழும்பு, புதன்

அண்மையில் ஜாகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய-ஆபிரிக்க ஆயத்தக் கூட்டத்தில் இந்தியாவுக்கு ஆதரவளித்ததற்காக இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனர் திரு. பி. ஆர். எஸ். மணி நேற்று முன்தினம் இலங்கை வெளிவிவகார காரியாலயத்துக்குச் சென்று இந்திய அரசாங்கத்தினல் அனுப்பபபட்ட கடிதமொன்றை திரு. என். கியு. டயஸிடம் சமர்ப்பித்தார்.

இரண்டாவது ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டுக்கு சோவியத் யூனியனையும் மலேசியாவையும் அழைக்கவேண்டுமென்று இந்திய அரசாங்கம் வெளியிட்ட கோரிக்கைக்கு இலங்கை ஆதரவளித்ததற்காகவே நன்றி தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆசிய-ஆபிரிக்க மகாநாடு அடுத்த வருடம் ஆபிரிக்க நாடொன்றில் நடைபெறவிருக்கிறது.

# 5 மந்திரிகளை பொலிஸார் விசாரித்தனர்

## சபாநாயகரும் விசாரணை செய்யப்பட்டார்

கொழும்பு, புதன்

இலங்கையில் பார்லிமெண்டரி ஜனநாயக முறையை ஒழித்துக்கட்டும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா செய்துகொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து சி. ஐ. டி. பொலிசார் இதுவரை ஐந்து மந்திரிகளையும், இரு மந்திரிகளின் மனைவியரையும் விசாரணைசெய்துள்ளனர்.

பார்லிமெண்ட் சபாநாயகர் திரு. ஹியு பெர்னாண்டோவையும் சி. ஐ. டி. பொலிசார் விசாரணைசெய்துள்ளனர்.

திருவாளர்கள் சி. பி. டி' சில்வா, ரி. பி. இலங்கரத்ன, பி. பி. ஜி. கலுகல்லை, மைத்திரிபால சேனநாயக்கா, டி. எஸ், குணசேகரா ஆகியோரே சி. ஐ. டி. பொலிசாரால் விசாரணைசெய்யப்பட்ட ஐந்து மந்திரிகளுமாவர். திருமதி மைத்திரிபால சேனநாயக்கா, திருமதி எம். பி. டி. சற். சிறிவர்த்தன ஆகியோரே பொலிசாரால் விசாரணைசெய்யப்பட்ட மந்திரிகளின் மனைவியர்களென அறியப்படுகிறது.

# சிரமதான வேலைகள் சிறப்பாக நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்றுடன் மூன்றுவது நாள் முடிவடையும் நீர்வேலி-கைதடி இணைப்பு வீதியின் சிரமதான வேலை, அமைப்பாளர்கள் எண்ணிய அளவிலும் சிறப்பான முறையில் முன்னேறிக்கொண்டுபோகிறது. சிரமதான வேலைத் தொண்டர்களின் தொகை நேற்று ஆயிரத்துக்கு அதிகரித்திருந்தது. 16 அடி அகலமான இவ்வீதி நேற்று வரை ஐயாயிரம் அடி தூரம் வரையில் மண்வெட்டி ஆரம்ப வேலைகள் முடிவடைந்துவிட்டன.

அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம், அகில இலங்கைச் சர்வோதய சங்கத் தொண்டர்களுடன் நீர்வேலி-கைதடியைச் சுற்றியுள்ள கிராமத்திலுள்ள மக்கள் மிகக் கூடுதலாகத் தொண்டர்களாகச் சேர்ந்து வேலைசெய்கின்றனர். நேற்று எழுபத்தைந்துக்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், இன்ஸ்பெக்டர் மாணிக்கத்தின் தலைமையிலும், சுகாதார இலாகா தொழிலாளர்கள் மற்றும் அரசாங்க இலாகா உத்தியோகத்தர்கள் எல்லோரும் கலந்து மிக உற்சாகமாக வேலை செய்தனர். அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா ஸ்தலத்தில் நின்று தேவையான உதவி கொடுத்து உற்சாக மூட்டிவருகிறார்.

கிராமப்பகுதி மக்களும், யாழ்ப்பாண நகர மற்றும் சுற்றுப்புற வியாபாரிகளும்

(6-ம் பக்கம் பார்க்க)

உடுவில்
ஆசிரிய கலாசாலைப் பழைய மாணவிகளுக்கு

**ஓர் அறிவித்தல்**

அன்புடையீர்!

நீங்கள் யாவரும் அறிந்தபடி காலஞ்சென்ற எங்கள் அருமையான கிளாக் அம்மா மாக்கிறெற் அக்கா அவர்களின் ஞாபகார்த்த நிதிக்காகப் பணஞ்சேர்த்தோம். செலவு தள்ளி மிகுதியான 355 ரூபாவையும் ஆதரவற்ற பெண்கள் பராமரிக்கப்படும் கிளிநொச்சி கருணைநிலையத்தின் தண்ணீர் வசதிக்காகக் கொடையாகக் கொடுபடவேண்டுமென்று தீர்மானிககப்பட்டது. கருணைநிலையத்தின் தண்ணீர்க குழாய்த் தொட்டி முதலியன அமைப்பதற்கு சுமார் ஐந்நூறு ரூபா வரையில் தேவையென அறிகிறோம். ஆகையால் இன்னும் உதவி செய்ய விரும்புவோர் எமது தனாதிகாரிக்குக் கொடைகளை அனுப்புமாறு வேண்டுகிறோம்.

தனாதிகாரியின் விலாசம்:
திருமதி ப. துரைராசசிங்கம்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். 333

இங்ஙனம்,
எவ். சி. தானியேல்,
(இரத்தினம் தானியேல்)
காரியதரிசி

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

**பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்**

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA **ROYAL DISPENSARY** T'GRAMS ROYAEL

### மணிவாக்கு

உணவுக்கும், அமைதிக்கும், புதிய உலகை அமைக்கவும் மக்கள் மிகப் பசியுடனுள்ளனர். தெய்விக நெறியால் அமையும் ஒற்றுமையாலே எல்லாப் பிரச்சினைகளும் தீரமுடியும். வேலையற்றவருக்கு வேலையும், உணவற்றவருக்கு உணவும், வெறும் உள்ளத்துக்கு திருப்தியளிக்கும் ஒரு குறிக்கோளும் கிடைக்கும்.

—பிராங்க் புக்மன்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
சித்திரை மீ 11 உ (23-4-64)

## ஷேக்ஸ்பியர் பிறந்தார்

உலக மகா கவிஞரான ஷேக்ஸ்பியரின் பிறந்ததினம் இன்று. ஆங்கிலேயரின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகதிருக்கும் அவரது 400-வது பிறந்ததினம் இவ்வாண்டு இதுவரையில்லாத தனிச்சிறப்புடன் கொண்டாடப் படுகிறது. புலவர் பிறந்த ஊரான ஸ்ட்ராட்போர்ட் அபான்-எவோன் இன்று உலக மக்களுக்கு ஒரு யாத்திரைஸ்தலமாகவிளங்கும். 117 நாடுகளின் கொடிகள் ஷேக்ஸ்பியர் பிறந்து, வாழ்ந்த ஊரில் கம்பீரமாகப் பறந்து கொண்டிருக்கும்.

உலகம் முழுதுமிருந்து உத்தியோக ரீதியான பிரதிநிதிகள் இம் மகா விழாவில் கலந்து கொள்கின்றனர். புலவரின் பிறந்த ஊரும், பிறந்த நாடும் மட்டுமின்றி, 80க்கு மேற்பட்ட வெளிநாடுகளிலும் இவ்வாண்டு ஷேக்ஸ்பியர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஷேக்ஸ்பியரின் பெருமை கடல்களையும், மலைகளையும், தேசங்களையும் தாண்டி எங்கும் நிறைந்திருக்கிறது. அரசியல் எல்லையும், பூகோள எல்லையும் அவர் பெருமையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒப்பற்ற நாடகப் புலமையினாலும், கற்பனாசக்தியினாலும் தமது படைப்புக்களை அவர் உலகுக்குச் சொந்தமாக்கினார். நன்றியுள்ள உலகமும் அவரைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது. ஷேக்ஸ்பியர் உலகத்தின் பொதுச் சொத்தாக விளங்கிவருகிறார்.

ஷேக்ஸ்பியரைக் கொண்டாடும் அதே வேளையில் நமது தமிழ்ப்புலவர்களைப் பற்றியும் சிலவார்த்தைகள். நமது புலவர்களிலே கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கற்பனைக்கும், கவிநயத்துக்கும் இணையானவர்கள் எவரும் இல்லை. ஆங்கிலேயர் ஷேக்ஸ்பியர் மீது எவ்வளவு பெருமை கொண்டிருக்கிறார்களோ, அவ்வளவு பெருமையை கம்பன் மீதும், நாமும் கொள்ளத்தகுதியும் உரிமையும் உண்டு. ஆனால் கம்பனின் பெருமையைத் தமிழ்லகத்திலிருந்து உலக நாடுகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். கம்பராமாயணம் மாபெரும் காவிய நாடகம் இதைத் தகுதி பெற்றோர் வேறு மொழிகளில் பெயர்ப்பது மூலமே நமது பெருமையும் உலகுக்கு நன்கு தெரியும்.

கம்பர்விழா தமிழ்நாட்டில் அவர் தோன்றிய தேரழுந்தூரிலும், காரைக்குடியிலும் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. நமது யாழ்ப்பாணத்தில் இலங்கை கம்பன் கழகம் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறோம். தென்னாட்டிலும் இந்நாட்டிலுமுள்ள கம்பன் கழகங்களும் இதர இலக்கியக் கழகங்களும் குறிப்பாக இந்திய சாகித்ய அகடமி போன்றவையும் கவிச்சக்கரவர்த்தியின் நூலை உலகமொழிகளில் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும். உலகுக்கு அவன் பெருமையைப் பரப்ப வேண்டும். நிற்க:

உலகம் உள்ளவரை ஆங்கில இலக்கியம் உள்ளவரை, ஷேக்ஸ்பியரின் பெயர் மங்காது அழியாது. ஷேக்ஸ்பியருக்கு நமது அஞ்சலி.

---

### புரட்சிக் கவிஞர்

தமிழ்கூறும் நல்லுலகுக்கு மற்றுமொரு பேரிழப்பு. இசை மன்னன் காருகுறிச்சி அருணாசலம் மறைந்த துயர் இன்னும் நீங்கவில்லை. அதற்குள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை இழந்துவிட்டோம்.

தமிழே மூச்சு, சமூகமே பேச்சு என்று வாழ்ந்த புரட்சிக் கவிஞரையும் இழந்து தவிக்கின்றோம். தமிழர் ஒற்றுமைக்காக, தமிழின் வளர்ச்சிக்காக, தமிழர் நல்வாழ்வுக்காக சங்கம் முழங்கிய புரட்சிக் கவிஞரின் கனவை நனவாக்கவேண்டியது தமிழர்கடன்.

இலங்கைக்கு வரவிருந்த புரட்சிக் கவிஞர், இலங்கை மக்களை இவ்விதம் ஏமாற்றிவிடுவார் என இங்கு யார்தான் எண்ணியிருப்பர்?

தமிழுக்கும் தமிழருக்கும் அவர் செய்துள்ள அரும் பணியே, அவரது புரட்சிக் கவிதைகளே அவருக்குப் பெரும் ஞாபகச்சின்னமாகும். அவர் நாமம் நீடூழி வாழ்க!

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

— "தேனீ" —

"எளிய நடையில் தமிழ்நூல்
எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக
இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில்
புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும்
பெயர்களெலாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடுசுவடியெலாம்செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச்செய்வதுவும்வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன்
படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும்
நாணிடவும் வேண்டும்."
—பாரதிதாசன்

எளிய நடை ஒன்றாலேயே தமிழின் மேன்மையைத் தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையையுடைய கவிஞர் பாரதிதாசன், பழந்தமிழ்க் காப்பியங்களுக்கும், மேலாக இயற்கைக்கும், மக்கள் வாழ்க்கைக்கும் ஏற்ற இனிய காவியங்களை அளித்து தமிழை அலங்கரித்துள்ளார். இலக்கிய உலகிலே என்றென்றும் தனித்தியங்கத்தக்க, தனித்தமிழ் காவியங்களை அவர் ஆக்கியளித்தார். அவரது கவிதைகளும், காவியங்களும் இன்பப் பெருக்கும், நகைச்சுவையும், வீர உணர்ச்சியும் நிறைந்தவை.

தமிழ் என்றதும் பாரதியாருக்கு எப்படி உணர்ச்சியும் வெறியும் ஏற்படுமோ அதைவிட அதிகமான உணர்ச்சியும் வெறியும் ஒருவித ஆவேசமும் பாரதிதாசனிடம் தோன்றும். இதை அவரது கவிதைகளில் காணலாம்.

பாரதிதாசன் தமிழில் பாடினார். ஆனால் பாடாதது எதுவுமில்லை யென்றே கூறலாம். இயற்கையை, காதலை, தமிழின் இன்பத்தை, இனிமையை பாடிய பாரதிதாசன், பெண்களைப் பற்றியும் கைம்மைக் கொடுமையைப் பற்றியும் பாடியிருக்கிறார். குழந்தைத் தாலாட்டுப் பாடிய அதே கவிஞர், 'தவிப்பதற்கோ பிள்ளை?' என்று கேட்டு குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் வழி காட்டுகிறார். பத்திரிகை, தமிழ் நாட்டின் சினிமா முதல் காக்கை, குருவி, பூசணிக்காய் வரை பாரதிதாசன் பாடியிருக்கிறார். அவரது தமிழ் இன்பத்தினால் அவர் தொட்ட பொருள்கள் யாவும் சிறப்புப் பெற்றன என்று சொல்லலாம். காக்கை 'காகா' என்பதிலும் மாடு 'அம்மா' என்பதிலும் குயில் "கூ...கூ..." என்பதிலும் தமிழைக் கேட்டு இன்பம் கண்டவர் பாரதிதாசன்.

#### பிறப்பும் வளர்ப்பும்

29-4-1891-ல் அப்பொழுது பிரஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த புதுச்சேரியில் சுப்புரத்தினம் என்னும் இயற்பெரைக் கொண்ட பாரதிதாசன் பிறந்தார். புதுச்சேரியில் பெரிய வணிகராய் இருந்த கனகசபை முதலியார் இவரின் தந்தையாராவர்.

சுப்புரத்தினம் சிறுவயதில், பிரஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றாலும் தமிழ்ப் பள்ளியில் பயின்ற காலமே அதிகம். தமது பதினாறும் ஆண்டில் கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். இயல்பால் தாய்மொழிப் பற்றும், முயற்சியில் தமிழறிவும் நிறைந்தவராதலின் இரண்டு ஆண்டில், கல்லூரியிலேயே முதலாவதாகத் தேறினார். இவரின் திறமையை உணர்ந்த ஆட்சியாளர் அரசியல் கல்லூரித் தமிழாசிரியராக்கினர்.

சிறு வயதிலேயே பாடல்கள் இயற்றி அவற்றைத் தமது தோழர்களுக்குப் பாடிக்காட்டி மகிழ்வார் சுப்புரத்தினம்.

#### பாரதியார் தொடர்பு

நண்பர் ஒருவரின் திருமணத்தில் விருந்துக்குப்பின் சுப்புரத்தினம், பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடினார். பாரதியாரும் அங்கிருந்தது இவருக்குத் தெரியாது. அங்கு பாடிய பாடலே பாரதியாருக்கு இவரை அறிமுகப் படுத்தி வைத்தது. 'சுப்புரத்தினம் ஒரு கவி. அதற்குரிய தன்மை அவரிடம் உண்டு, என்ற எண்ணம் பாரதியாருக்கு ஏற்பட்டது.

ஒருநாள், பல நண்பர்களிடையே இதைத் தெரிவிக்க விளைந்த பாரதியார் "சுப்புரத்தினம் கவி இயற்றவல்லவன்" என்று கூற "எங்கே எழுதச் சொல்லுங்கள் பார்ப்போம்" என்று நண்பர்கள் கேட்க "பாடு" என்று பாரதியார் சொல்ல,

"எங்கெங்கும் காணினும்
சக்தியடா!- தம்பி
ஏழுகடல் அவள் வண்ண
மடா!-அங்குத்
தங்கும் வெளியினிற் கோடி
யண்டம்-அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடு
மடா-ஒரு
கங்குகளில் ஏழு முகிலின
மும்-வந்து
கர்ச்சனை செய்வது கண்ட
துண்டோ?-எனில்
மங்கை நகைத்த ஒலியென
லாம்-அவன்
மந்த நகையங்கு மின்னு
தடா!

* * *

காளை ஒருவன் கவிச்சுவை
யைக்-கரை
காண நினைத்த முழுநினைப்
பில்-அன்னை
தோளசைத் தங்கு நடம்
புரிவாள்-அவன்
தொல்லறிவாளர் திறம்
பெறுவான்-ஒரு
வாளைச் சுழற்றும் விசை
யினிலே-இந்த
வையம் முழுவதும் துண்டு
செய்வேன்-என
நீள இடையின்றி நீ
நினைத்தால்-அம்மை
நேர்படுவாள் உன்றன்
தோளினிலே!

என்று பாரதிதாசன் பாடினார். பாரதியாரின் விருப்பப்படிகனக. சுப்புரத்தினம்முதன் முதலில் பாடிய இந்தப்பாடல் பல பத்திரிகைகளில் பல மொழிகளில் வெளிவந்து அவரைப் பாரதிதாசன் என்று தமிழ்நாட்டிற்கு உணர்த்திற்று. வேறு யாரும் பெறாத மதிப்பையும் புகழையும் பாராட்டையும் 'கவிஞன்' என்ற சிறப்பினால் பாரதியாரிடமிருந்து பாரதிதாசன் பெற்றார்.

சீர்திருத்தக் கருத்தையும் கொண்ட கொள்கைக்காகப் போராடும் குணமும் படைத்த பாரதிதாசன் சாதிபேதத்தையும் சமயபேதத்தையும்வெறுத்தார்.

"பழைய நடை, பழங்கவிதை
பழந்தமிழ் நூல்
பார்த்தெழுதிப் பாரதியார்
உயர்ந்தாரில்லை."

என்று தமது குரு பாரதியாரைப்பற்றிப் பாரதிதாசன் ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதேபோன்று சமுதாயத்தில் உள்ள தீமைகளை ஒழித்து புதிய சமுதாயம் சமைக்க தமது சக்தியைப் பயன்படுத்தினார். இதனால் அவர் புரட்சிக் கவிஞர் என்ற சிறப்புப் பெயரும் பெற்றார்,

அரசியலிலும் பங்குகொண்ட புரட்சிக்கவிஞர் தமிழ் சினிமாவில் புரட்சி ஏற்படுத்தும் பொருட்டு படத்தயாரிப்பாளராகவும் சமீபத்தில் மாறினார்.

"எங்கள் வாழ்வும் எங்கள்
வளமும்
மங்காத தமிழென்று சங்கே
முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ
மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்
றுதல் கண்டே!"

என்ற புரட்சிக்கவியின் ஒற்றுமை வேட்கையும்,

"சிங்களஞ் சேர் தென்னாட்டு
மக்கள்
தீராதி தீரரென் றூது
சங்கே!
பொங்கு தமிழர்க்கின்னல்
விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே
முழங்கு!"

என்ற அவரது சங்கநாதமும் நனவாகும் நாள் எந்நாளோ!

---

## சர்வதேச மாணவர்களின் இல்லம்

லண்டன், ஏப். 22

அடுத்த ஆண்டு ஏப்ரலில் சாம்ராஜ்ய நாடுகளிலும் மற்றும் நாடுகளிலும் உள்ள மாணவர்களின் நலனுக்காக சர்வதேச மாணவர்கள் இல்லம் ஒன்று திறக்கப்படும். நூற்றுமுப்பத்தைந்து மாணவர்கள் தங்குவதற்கு வசதி அளிக்கும் இக்கட்டிடத்துக்குரிய அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டது.

---

## ஐயாறன் எழுதுவது

கம்பன் மீண்டும் இங்கு பிறந்துவிட்டான்! எங்கு பிறந்தான் தெரியுமா? நீதி அரசர் தம்பையா அவர்களின் உள்ளத்தில்தான். எப்படி?

ருசியான இந்தக் கதையை எழுத்தாளர் டாக்டர் 'நந்தி' முந்தாநாள் யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலே நடந்த கூட்டத்தின்போது வெளியிட்டார்.

சில நாட்களுக்குமுன் யாழ்ப்பாணத்திலே ஒரு விழா நடந்ததாம். அது முடிந்து கூட்டம் கலைகையில், 'நந்தி'யைப் பார்த்த நீதி அரசர், "உங்கள் எழுத்தாளர் சங்கமெல்லாம் என்ன செய்கின்றன? தூங்குகின்றனவா?" என்று கேட்டார். "ஆமாம். அடிகாயம் பட்டபின் தூங்குகின்றன" என்று பதிலளித்ததும், ஈழத்திலே கவிச் சக்ரவர்த்தி கம்பனுக்காக ஒரு கழகம் அமைத்து, ஏன் இலக்கியப் பணி செய்யப்படாதென்று நீதி அரசர் கேட்டு பெரிதும் ஊக்கப்படுத்தியதால்தான், "இலங்கை கம்பன் கழகம்" உருவாக முடிந்ததென்றும் "நந்தி" விளக்கினார்.

நீதி அரசரே, இக்கழகத்துக்குத் தலைவராக இருக்க ஒப்புக்கொண்டது மிகப் பொருத்தம். இக்கழகம், நன்கு செயலாற்றலாமென்ற நம்பிக்கையும் அளிப்பதாக இருந்தது.

* * *

கிறிஸ்தவர் எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் அதை வெற்றியாக முடிக்க உறுதி கொண்டு உழைப்பரென்றார் என்பக்கத்திலிருந்த சைவ அன்பரொருவர். நீதியரசர் ஒரு கிறிஸ்தவர். "ஈசுவரன் அருளாலே இந்தக் கழகம் நன்றாக வளர்ந்து வெற்றிபெற வேண்டும்" என்று அவர் கூறியது அவரது பரந்த பக்தி உள்ளத்தைக் காட்டியது. அத்துடன் நாமும் முயற்சி எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார் அவர்.

அன்று 'டக்டக்' என்று காரியங்கள் நடந்து, கழகம் அமைக்கப்பட்டவிதத்தையும், பல இலக்கிய அன்பர்கள் கூடி ஒத்துழைத்ததையும் காண்கையில், இக்கழகம் நல்ல வெற்றி பெறுமென்று உணரக்கூடியதாக இருந்தது.

போட்டி எழுத்தாளர் சங்கங்களைச் சேர்ந்த சிலரையும் அக்கூட்டத்தில் கண்டேன். மகிழ்ச்சியாக இருந்தது. சாதி, மத வேற்றுமைகளை மறந்து, தமிழரை எல்லாம் ஒன்றுபடுத்தும் ஒற்றுமைச் சக்தியாகக் கம்பன் விளங்குவதாகக் கூறுவதுண்டு இங்கு பிளவுபட்டுப் பிரிந்திருக்கும் தமிழ் எழுத்தாளரை, கம்பன், தோன்றாத் துணையாக இருந்து, ஒருங்கு கூட்டியதை அங்கு நேரில் கண்டேன். மக்களுக்கு வழி காட்டவேண்டிய எழுத்தாளர் ஒன்றுபடுவதாயின், மக்களும் ஒன்றுபட்டு நல்வாழ்வு வாழ வழி பிறக்குமல்லவா?

* * *

காயப்பட்டு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக "அவசரகேஸ்"கள் பல வருகின்றன அல்லவா? அதற்குப் பெரும்பாலும் காரணம் என்ன தெரியுமா? குடிதான் என்கிறார் ஒரு டாக்டர். குடிபோதையில் தன் நிதானமிழந்து இப்படியான குற்றங்கள் நடக்கின்றனவாம்.

குடிப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை. தேசிய தினத்தன்று நீதியரசர் தம்பையா பகிரங்கமாகக் கூறி, இத்தீமையை, ஒழிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

மற்றொரு கூட்டத்திலே ஓரன்பர், குடியால் ஏற்படும் கேடுகளை உணர்ச்சியுடன் எடுத்துச் சொல்லி அதை ஒழிப்பது அவசியமான முதல் வேலை என்றார். ஆனால் இதை யார் காதில் வாங்கப்போகிறார்கள்!

கலைப்புலவர் நவரத்தினம் மறைந்தபின் பொது மேடைகளிலே இதைப்பற்றி யாரும்

(5ம் பக்கம் பார்க்க)

# “அப்துல்லாவுடன் திறந்த மனதுடன் பேசுவேன்”—நேரு

## கிழக்கு பாகிஸ்தான் அகதிகள் வெளியேற்றம் குறித்தும் பிரஸ்தாபம்

புதுடில்லி, ஏப். 22

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து சிறுபான்மையினர் வெளியேறி வருவதால் வகுப்புப் பிரச்னையில் விசித்திரமான திருப்பம் ஏற்பட்டிருக்கிறது என பிரதமமந்திரி நேரு நேற்று காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள எல்லா 90 லட்சம் சிறுபான்மையினரும் வெளியேறக்கூடும் எனச் சிலர் அச்சம் கொண்டிருக்கின்றனர் என்றும் பிரதமர் கூறினர்.

அகதிகள் மறுவாழ்விப்புக்காக தனிமந்திரி நியமிக்கப்பட்டிருப்பதுபற்றிக் குறிப்பிட்ட திரு. நேரு, முஸ்லிம்களின் மறுவாழ்விப்பையும் புதிய மந்திரி கவனித்துக் கொள்வார் எனக் குறிப்பிட்டார்.

கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமாகப் பிரவேசித்திருக்கும்பாகிஸ்தானியரைத்திருப்பியனுப்ப இந்தியாவுக்கு உரிமை உண்டு. ஆனல் அவர்கள் பாரதப் பிரஜைகள் என பாகிஸ்தான் வாதிக்கிறதுஎன்றும் அவர் கூறினர்.

பிரதமர் மேலும் பேசுகையில், ஷேக்அப்துல்லா இன்னும் ஒருவாரத்திற்குள் புதுடில்லிக்கு வருவார் என்றும் திறந்த மனதுடன் பூரணமாகவும் அவருடன் தாம் பேசப் போவதாயும் கூறினர்.

காஷ்மீர்பபறி வெளிநாட்டுப் பத்திரிகைகள் பெரிதுபடுத்தி செய்திகளைப் பிரசுரிக்கின்றன. இவை இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுகின்றன.

பாரதபத்திரிகைகள் ஒரு தலைப்பட்சமான செய்திகளைப் பிரசுரிக்கின்றன. பாகிஸ்தான் பத்திரிகைகளோ ஆதாரமற்ற செய்திகளைப் பிரசுரிக்கின்றன என்றும் திரு. நேரு கூறினர்.

# “நன்ருகச் சொன்னீர்கள்”

புதுடில்லி, ஏப். 22

“கடைசியில் ஹிந்திதான் இந்தியாவின் தேசிய மொழியாகப்போகிறது. ஆனல் நான்வயதானவன். என்னல் அதைக் கற்றுக்கொள்ளமுடியாது” என திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி நிதி மசோதாவைச் கொண்டுவந்துபேசுகையில் கூறினர்.

தி. மு. க. அங்கத்தினர் திரு. கே. ராஜாராம் குறுக்கிட்டு, “உங்களால் முடியாது. ஏன், எந்தத் தென்னிந்தியனும் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள முடியாது” என்ருர்.

“ஹிந்தி இந்தியாவின் தேசிய மொழியாகவேண்டுமென்று நீங்கள் விரும்பினல் இன்னும் இரண்டு தலைமுறைகளாவது காத்திருகக வேண்டும். இல்லையென்ருல் நீங்கள் அதைப் பெற முடியாது” என்று டி. டி. கே. கூறினர்.

“நன்ருகச் சொன்னீர்கள்” என்று பாராட்டினர் ஸ்ரீ கபூர்சிங் (சுதந்திரா).

# இளவரசர்சுவர்ணபூமா இன்னும் கட்டுப்பாட்டில் இருக்கிருர்

## லாவோஸ் அரசியலில் தெளிவு ஏற்படவில்லை

வியண்டயன், ஏப். 22

லாவோஸ பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா நேற்று மன்னரை வலதுசாரித் தலைவர்களுடன் இரண்டாவது முறையாகச் சந்தித்துப் பேசினர் என அறிவிக்கப்படுகிறது.

இளவரசர் இன்னும் வீட்டுப் பாதுகாப்பிலேயே வைக்கப்பட்டிருக்கிருர் என்றும், அவரது வீட்டைச் சுற்றி துருப்புக்கள் பலத்த காவல் புரிவதாயும் அறிவிக்கப்படுகிறது. இளவரசர் தமது வீட்டின் பால்கனியிலிருந்து பேசுகையில் நிருபர்களைச் சந்திப்பதிலிருந்து தாம் தடுக்கப்பட்டிருப்பதாய்க் கூறினர்.

இதற்கிடையில் இந்தியா உள்பட பல நாடுகளின் ராஜீயத் தூதுவர்கள், வலதுசாரி உதவிப் பிரதமர் திரு. பூமி நொஸாவானைச் சந்தித்துப் பேசினர்.

நெருக்கடியைத் தவிர்க்க தம்மால் இயன்றதைச் செய்வதாக அவர் கூறினர். வலதுசாரிப் புரட்சியைத் தாம் ஆதரிக்கவில்லை என்றும் அவர் உறுதியாகக் கூறினராம்.

இதற்கிடையில் தலைநகர் வியண்டயனில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கிறது. விமான நிலையம், தந்தி நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன.

லாவோஸ் நிலைமை பற்றி பிரிட்டனும் ரஷ்யாவும் தொடர்பு கொண்டிருப்பதாய்க் கூறப்படுகிறது.

நாட்டிலுள்ள முக்கிய நிர்வாக பதவிகளில் வலதுசாரிகள் முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

லாவோஸ், வியட்னும், கம்போடியா ஆகிய மூன்று நாடுகள் அடங்கிய ஜெனிவா மகாநாட்டைக் கூட்டி ஆலோசனை நடத்த வேண்டும் என கம்போடிய இளவரசர் திரு. நோரோடம் சிகானுக் கேட்டுக் கொண்டிருக்கிருர். லாவோஸ் நிலைமை அண்டை நாடுகளிலும் பத்திரமின்மையை ஏற்படுத்தியிருப்பதாய் அவர் கூறினர்.

# சுந்தரய்யா போர்க்கோலம்!

## “ஆந்திர கம்யூனிஸ்ட் கமிட்டி” நிறுவுகிருர்

ஹைதராபாத், ஏப். 22

கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட 32 டாங்கே எதிர்ப்பாளர்களில் ஒருவரான திரு சுந்தரய்யா, ஆந்திரப் பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து தனது பணியை நடத்துமென்றும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் மகாநாட்டுக்கு அது ஆயத்தம் செய்யுமென்றும் கூறினர்.

ஆந்திரப் பிரதேசக் கம்யூனிஸ்ட் கமிட்டி ஒன்று தமது தலைமையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்றும் இதில் 11 அங்கத்தினர்கள் இருக்கிருர்கள் என்றும் அவர் கூறினர்.

# ஆந்திரபிரதேசில் மாபெரும் எஃகு ஆலை

புதுடில்லி, ஏப். 22

6-வது ஐந்தாண்டுத்திட்டத்தில் 25 லட்சம் டன் உற்பத்திசெய்யும் எஃகு ஆலை ஒன்று விசாகப்பட்டினத்தில் நிறுவப்படுமென ஆந்திர பிரதேச தொழில் மந்திரி அறிவித்திருக்கிருர். இதற்கு 300 கோடி ரூபாய் செலவாகும் என்றும் மந்திரி அறிவித்தார்.

---

# லஜபதிராய் நூற்ருண்டு

சென்னை, ஏப்ரல் 22

அடுத்த ஆண்டு வரவிருக்கும் லாலா லஜபதிராயின் நூற்ருண்டு விழாக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு, சென்னையில் முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் தலைமையில் 8 பேரடங்கிய கமிட்டியொன்று நியமிக்கப் பட்டிருக்கிறது.

---

# “300 பிரிட்டிஷ் துருப்புக்கள் கொல்லப்பட்டனர்”

## போர்னியோ எல்லை நிலைபற்றி இந்தோனேஷிய பத்திரிகை

ஜாகர்த்தா, ஏப். 22

கடந்த ஜனவரிமாதம் முதல் போர்னியோ எல்லையில் 300 பிரிட்டிஷ் துருப்புக்கள் கொல்லப்பட்டதாய் இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் பத்திரிகை “பீபிள்ஸ் டெய்லி” கூறியது.

ஆனல் இந்தக் கவலை சிங்கப்பூரிலுள்ள பிரிட்டிஷ் ராணுவப் பேச்சாளர் ஒருவர் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானது எனக் குறிப்பிட்டார்.

இந்தோனேஷியா போர்னியோவுக்குள் புகமுயன்ற பிரிட்டிஷ்-மலேஷிய கூட்டுப்படை ஒன்றை இந்தோனேஷியக் கொரில்லாக்கள் துவம்சம் செய்துவிட்டதாய் இப்பகுதி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்தோனேஷிய தளகர்த்தர் லெப்டினண்ட் ஜெனரல்ஹஸன் சுவிவ்ஜோ கூறினர். “நேட்டே” முத்திரை பொறிக்கப்பட்ட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாயும் அவர் கூறினர்.

இதை மறுத்த சிங்கப்பூர் ராணுவப் பேச்சாளர் இந்தோனேஷிய எல்லைக்குள் புக வேண்டாம் என துருப்புக்களுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாயும் எவரும் புகவில்லை என்றும் பிரிட்டிஷ் மலேஷிய ஆயுதங்களில் “நேட்டோ” முத்திரை கிடையாது என்றும் அவர் கூறினர்.

# பிரச்னைகளைத் தீர்ப்பதில் அயூபின் ஆர்வம்

## ஜெனரல் கரியப்பா தகவல்

ஹைதராபாத், ஏப். 22

“மனமாறுதல் இருப்பதாகத்தான் நம்பினல் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்கவும், இதரவேறுபாடுகளைப் போக்கவும் பிரதமர் நேருவுடன் பேச அயூப்கான் விரும்புகிருர்” என பாகிஸ்தான் அதிபரை ராவல்பிண்டியில் சந்தித்துப் பேசிய பிறகு ஜெனரல் கரியப்பா கருத்து தெரிவித்தார்.

காஷ்மீர், சீன - பாகிஸ்தான் உறவு, சிறுபான்மையினர் பிரச்னை ஆகியவை பற்றி அயூபுடன் அவர் விவாதித்தார்.

பாகிஸ்தான் அதிபரிடம் ஏராளமான நல்லெண்ணத்தையும் இந்திய - பாகிஸ்தான் உறவு அபிவிருத்திக்கு எல்லாப் பிரச்னைகளையும் தீர்க்கும் விருப்பத்தையும் கண்டதாக நிருபர்களிடம் அவர் கூறினர்.

“அயூபின் நண்பன் என்றரீதியில்அவரைச் சந்தித்தேன். எனக்கு அதிகாரபூர்வமான, அல்லது அரசியல் அதிகாரம் இல்லை” என்றும் ஜெனரல் கரியப்பா கூறினர்.

“இரு நாடுகளிலும் அப்பாவிப் பெண்களையும், குழந்தைகளையும் கொன்றது துரதிருஷ்டவசமானது. வெறுக்கத்தக்கது என்பதை இருவரும் ஒப்புக்கொண்டோம். வகுப்புக் கலவரம் பற்றிக் கேள்விப்பட்டதும் விஷமிகளையும், சமூக விரோதிகளையும் பார்த்ததும் சுடுமாறு கிழக்கு பாகிஸ்தானுக்கு உத்தரவிட்டதாக அயூப் என்னிடம் கூறினர்”.

வகுப்பு சௌஜன்யத்தைக் காக்க மக்களுக்கு கூட்டுவேண்டுகோள் விடுவதில் இந்திய ராஷ்டிரபதியுடன் சேர பாகிஸ்தான் அதிபர் விருப்பம்தெரிவித்தார்.

15 வருட போர்நிறுத்தத்திற்குப் பிறகு காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிப் பேசுவது நிலைமையை மோசமாக்கும் என்பதைத் தெளிவுபடுத்தினேன். இந்தியாவில் 4 முதல் 5 கோடி முஸ்லிம்கள் இருக்கிருர்கள் என்பதை நினைவில் வைக்கவேண்டும். காஷ்மீர் பள்ளத்தாக்கு பற்றி நாம் சச்சர விட்டுக்கொண்டிருக்க முடியாது என்று அவரிடம் கூறினேன். இருதரப்பிலும் தாராள மனப்பான்மை இருக்கவேண்டும்” என்றும் கரியப்பா கூறினர்.

# அகதிகள் பிரச்னை

## 6 முதன்மந்திரிகள் ஆராய்வார்கள்

கல்கத்தா, ஏப். 22

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்கத்திற்குள் வரும் அகதிகளின் தொகை அதிகரித்திருப்பதாய் முதன்மந்திரி திரு. பி. ஸி. ஸென் கூறினர். அகதிப் பெருக்கம்பற்றி 6 ராஜ்யங்களின் முதன் மந்திரிகள் விரைவில் சந்தித்துப் பேசவிருக்கிருர்கள் என அவர் அறிவித்தார். திரிபுரா வரும் அகதிகளின் தொகை பெருக்கெடுத்திருப்பதாயும், 10,000 அகதிகள் அங்கு வந்திருப்பதாயும் அவர்களில் 1500 பேர் பௌத்தர்தள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

---

# ஸான்ஸிபாரின் பதில் இன்னும் கிடைக்கவில்லை

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு பற்றி ஹியூம்

லண்டன், ஏப். 22

வருகிற ஜூலை மாதம் 8-ம் திகதி முதல் 15-ம் திகதி வரை நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்ள ஸான்ஸிபார் தவிர இதர காமன்வெல்த் நாடுகள் ஒப்புக் கொண்டிருக்கின்றன என்று பிரிட்டிஷ் பிரதமர் சர் டக்ளஸ் ஹியூம் காமன்ஸ் சபையில் தெரிவித்தார்.

ஸான்ஸிபாரின் பதில் எதிர்பார்க்கப் படுகிறதென்று கூறிய பிரதமர், மகாநாட்டில் நியாஸாலாந்துகலந்து கொள்ளும் என்றும், தென்ரொடீஷியா கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்ததால் இதுபற்றி இதர காமன்வெல்த் நாடுகளுடன் ஆலோசனை செய்யப் படும் என்றும் கூறினர்.

# வல்லரசு முடிபுக்கு வரவேற்பு

நியூயோர்க், ஏப். 22

அணு ஆயுதங்களுக்குத் தேவையான அணுசக்திப் பொருள்களின் உற்பத்தியைக் குறைக்க ரஷ்யாவும், அமெரிக்காவும் செய்துள்ள முடிவை ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வரவேற்றிருக்கிருர்.

ஜெனிவா ஆயுதப்பரிகரண மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதி திரு. ஆர். கே. நேருவும் இதை வரவேற்ருர். மற்றும் ஐக்கிய அராபியக் குடியரசுப் பிரதிநிதிகள், பிரிட்டிஷ் பிரதிநிதி ஆகியோரும் இதை வரவேற்றனர்.

# அழகொல்லை

## விநாயகர் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன்

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயசப்பரத் திருவிழா நாளை நடைபெறுமென்றும், இரவு 8 மணியளவில் திரு. கணேசசுந்தரம் ‘கணபதி அருள் பெற்ற காரிகை’ எனும் பொருள்பற்றி கதாகாலக்ஷேபம் நிகழ்த்துவாரெனவும் அறிவிக்கப்படுகிறது.

# “இரகசிய இயக்கத்தில் பங்குபற்ற சம்மதித்தேன்”

## புரட்சி சதி வழக்கில் கான்ஸ்டபிள் சாட்சியம்

கொழும்பு, புதன்

மிகவும் இரகசியமான இயக்கமொன்றில் பங்குபற்ற பற்றப் பயப்படுகிறீரா? என்று காலி பொலிஸ் சுப்ரிண்டன் திரு. பெரேரா என்னைக் கேட்டபோது எனக்குப் பயமில்லையென்றும் அந்த இயக்கத்தில் பங்குபற்றத் தயார் என்றும் நான் தெரிவித்தேன்.

புரட்சி சதிவழக்கு மீண்டும் நேற்றுகாலை ஆரம்பமான போது கேகாலை பொலிஸ் கான்ஸ்டபிள் ரி. எச். அமரதாசா சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: 1962-ம் ஆண்டு ஜனவரி 27-ம் திகதி திரு. பெரேராவை அவரது கந்தோரில் சந்தித்தேன். எனக்குக் கிடைத்த ஒருதகவல் மூலமே அவரைச் சந்தித்தேன். அவர் என்னிடம் யார்மீது நம்பிக்கை வைத்திருப்பதாகக் கேட்டார். காலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் பெரேரா மீது நம்பிக்கையிருப்பதாகத் தெரிவித்தேன். அதன்பின் கான்ஸ்டபிள் பெரேராவை அழைத்துவரும்படி கூறினர். களுத்துறையிலுள்ள பொலிஸ் பயிற்சி நிலையததிற்கு எங்கள் இருவரையும் செல்லும்படியும் அங்கே மாலை 6 மணிக்கு திரு. ஒரை சந்திக்கும்படியும் பொலிஸ் சுப்ரிண்டண்ட் திரு. பெரேரா கூறினர். திரு. இரத்தினசிங்கத்தின் காரில் எங்களைக் களுத்துறைக்கு செல்லும்படி கூறினர். இதுபற்றி இரத்தினசிங்கத்திற்கும் அறிவித்துள்ளதாக எங்களிடம் திரு. பெரேரா கூறினர். உடுகமவிடமிருந்து தனக்கு ஒரு மறுமொழியும் வராதபடியால்

(4-ம் பக்கம் பார்க்க)

# மாநகரசபை பூங்காவில் ஞாயிற்றுக்கிழமை கலைநிகழ்ச்சி

## பௌர்ணமிதினங்களில் திறந்த வெளிஅரங்கில் நிகழ்ச்சிகள்

நல்லூர், வியாழன்

"தமிழ்பேசும் மக்களுக்கு உரித்தான தமிழ்க்கலைகளை தமிழ் மக்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வளர்ப்பதன் மூலமே முன்னேற்றம் காணமுடியும்" என்று யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா யாழ்ப்பாணம் மாநகர சபையின் நுண்கலைக் குழுவின் ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

மாநகரசபையின் செயற்குழு அறையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்கள் பலர் கலந்துகொண்டனர்.

திரு. துரைராஜா தமது உரையில் கூறியதாவது:

தமிழ்க்கலைஞர்கள் எல்லோருக்கும் போதிய சந்தர்ப்பம் கொடுத்து அவர்களை மென்மேலும் கலைத்துறையில் ஊக்கப்படுத்தவேண்டும். கலைத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் யாவரையும் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். கலைநிகழ்ச்சிகளைக் கலைஞர்களே பொறுப்பேற்றுச் செய்யவேண்டும். கலைஞர்களுக்கு உதவியாக மாநகரசபை இருக்குமே தவிர, கலைநிகழ்ச்சிகளுக்குப்பொறுப்பாக இராது.

இக்கூட்டத்தில் பௌர்ணமி தினங்கள்தோறும் யாழ் திறந்த வெளி அரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கலைநிகழ்ச்சிகளின் மின்சார, ஒலிபெருக்கி விஷயங்களுடன் கலைநிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட விளம்பர விஷயங்களையும் மாநகரசபையே பொறுப்பேற்றுச் செய்யவேண்டுமென்றும், ஒவ்வொரு பௌர்ணமி தினங்களிலும் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளுக்கு குறைந்தது நூறு ரூபாவையாவது ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மேயரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

கலைநிகழ்ச்சிகளைச் சிறப்பாக நிர்வகித்து நடத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் உதவிகளையும் நல்க விரும்பும் கலையார்வம் மிக்கவர்களிடமிருந்து அபிப்பிராயங்களையும் உதவிகளையும் இக்குழு வரவேற்பதோடு குறித்த விடயங்கள் பற்றிய அபிப்பிராயங்களை யாழ்ப்பாண மேயரின் முகவரிக்கே அனுப்பவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர மக்களுக்கு கலைநிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கும், இசை, நாடகம், நடனம், நாதஸ்வர இசை முதலான கலைநிகழ்ச்சிகளைத் தயாரித்தளிப்பதற்கும் யாழ்ப்பாண மாநகரசபையின நுண்கலை ஆலோசனைக் குழு தெரிவுசெய்யப்பட்டது.

இக்குழு உறுப்பினர்களாக மேயர் திரு. டி. எஸ். துரைராசா, செல்வி திரிபுரசுந்தரி குமாரசுவாமி, திருமதி எஸ். ரி. ஆசீர்வாதம், திருவாளர்கள் எஸ். பரம் தில்லைராசா, ஏ. ரி. செல்வரத்தினம், ஏ. எஸ். சின்னராசா, இ. மகாதேவா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். யாழ்ப்பாண மாநகர சபை நுண்கலைக் குழுச் செயலாளராக திரு. எஸ். பரம் தில்லைராசா தெரிவுசெய்யப்பட்டார்.

பௌர்ணமி தினமான 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலைநிகழ்ச்சிகளை மாநகரசபைப் பூங்காவில் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

# 'இந்துசமுத்திரத்தை விட்டு 7வது அணி வெளியேறவேண்டும்'

## கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

சாவகச்சேரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க ஆண்டுவிழா சென்ற சனிக்கிழமை காலை 10 மணியளவில் மட்டுவிலில் ஆரம்பமானது. விழாவில் முழுநாள் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கூட்ட நிகழ்ச்சிகளுக்கு திருவாளர்கள் ஏ. சாம்பசிவமூர்த்தி, சி. கந்தசாமி, பெ. சுப்பிரமணியம் ஆகிய மூவரைக் கொண்ட தலைமைக்குழு தலைமை தாங்கியது.

திரு. ஏ. சாம்பசிவமூர்த்தியின் தலைமையுரைக்குப் பின்னர் செயலாளர் திரு. கே. சுப்பையாவால் சங்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சங்கம் ஆரம்பித்த காலத்திலிருந்து அடைந்துள்ள வளர்ச்சி பற்றியும், பொதுமக்களுக்குப் புரிந்துள்ள சேவைபற்றியும் செயலாளர் எடுத்துக் கூறினார்.

பின்னர் யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளன செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் வாழ்த்துரை வழங்கினர். யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. சாம்பசிவமூர்த்தி; உபதலைவர்: திரு. ப. கிருஷ்ணன்; செயலாளர்: திரு. க. சுப்பையா; தனாதிகாரி திரு. சி. கந்தசாமி. நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் சி. சண்முகம், மு. நடேசன், சி. செல்லையா, வெ. யேசுதாஸன், சி. நடராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின் பிற்பகல் நிகழ்ச்சிகள் திரு. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, திரு. கே. டானியல், நீர்வை பொன்னையன், வி. ஏ. கந்தசாமி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

இடதுசாரி இயக்கத்தின் சில தலைவர்கள் முதலாளித்துவ வலையில் வீழ்ந்து தொழிலாளிவர்க்கத்துக்குத் துரோகமிழைக்கக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்படக்கூடிய இன்றைய கட்டத்தில் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி முன்வைத்துள்ள 21 கோரிக்கைகளை ஆதரிப்பதுடன், தொழிலாளவர்க்கத் தலைமையில் புரட்சிகரமான ஐக்கிய முன்னணி ஏற்படவேண்டுமென்றும் தேசபக்த மக்கள் இயக்கம் ஒன்றுபடவேண்டுமென்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

அமெரிக்காவின் 7-வது கடற்படை அணி இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு வந்திருப்பது தென்கிழக்காசிய நாடுகளின் சுதந்திரத்துக்கும், சுயாதிபத்தியத்துக்கும் சவாலாக அமைந்திருப்பதுடன் பிற்போக்கு சக்திகளின் சதிச் செயல்களுக்குத் தூண்டுகோலாகவும் அமைந்திருக்கின்றது. ஆகையால் உடனடியாக இந்து பிராந்தியத்திலிருந்து அமெரிக்காவின் 7-வது கடற்படை அணி வெளியேறவேண்டுமென்று இலங்கைவாழ் சுதந்திர மக்களின் சார்பில் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

திரு. க. சுப்பையா நன்றியுரை கூறினர்.

# சென்ற வருடத்தில் மூவாயிரம் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் கைது

## குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிக்கை தரும் தகவல்

கொழும்பு, புதன்

1962-63-ம் வருடகாலத்துள் சட்டவிரோதக் குடியேற்றகாரரென சந்தேகத்தின்பேரில் 3,058 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர்களில் 1,420 பேர் சட்டவிரோதக் குடியேற்றக்காரரென நிரூபிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்களெனவும் குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டு அதிகாரி திரு. டபிள்யு. டி. ஜெயசிங்கா தமது 1962-63-ம் வருடத்துக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சட்டவிரோதக் குடியேற்றத்தால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி இங்குள்ள மக்கள் உணர்ந்துகொண்டு வருவதும் இதுபற்றிய தகவல்களை மக்கள் சம்பந்தப்பட்ட இலாகாவினருக்குத் தெரிவித்து ஒத்துழைப்புக் கொடுக்க முன்வருவதும் குறிப்பிடத்தக்கவை. வடக்குக் கரையோரப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் அமர்த்தப்பட்டிருப்பதும் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் ஒன்று எனக் கூறலாம்.

தற்காலிக வாசகால பெர்மிட்டுகளை காலாவதியானவர்களும் விஸாக்கள் காலாவதியானவர்களுமான தேவையற்ற வெளிநாட்டவர்கள் பலரை இங்கிருந்து நாடுகடத்தும் முயற்சியில் இலாகா தொடர்ந்து முயற்சிஎடுத்துவந்துள்ளது. இந்த நாட்டுக்குள் இலங்கையர் அல்லாதவர்கள் வருவதைத் தடைசெய்யவும் இலாகா தொடர்ந்து முயற்சி எடுத்துவந்துள்ளது.

### இலங்கையர்மயக் கொள்கை

இலங்கையர்மயத் திட்டமும் இலங்கையரல்லாத சட்டவிரோதக் குடியேற்றக்காரரை நாடுகடத்தும் சட்டமும் இலங்கை அரசாங்கத்தினுல் சுமார் 9 வருட காலமாக அமுல் நடத்தப்பட்டுவருகிறது. இதன் காரணமாகப் பலருக்கு வாசகால விஸாக்களை நீடித்துக் கொள்ள சலுகை மறுக்கப்பட்டது. இவ்வித நடவடிக்கையினுல் இலங்கைப் பிரஜைகளுக்கு அதிக வேலை வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய வழி அமைக்கப்பட்டது.

மேற்படி திட்டம் அமுல் நடத்தப்படத் தொடங்கிய காலத்திலிருந்து வெளியேற்ற உத்தரவுக்கு அமைய 39,196 இலங்கையரல்லாதவர்கள் இலங்கையைவிட்டு வெளியேறியுள்ளார்கள். இந்தக் கால எல்லையுள் இலங்கையரல்லாத 56,042 பேர்கள் தாமாகவே இலங்கையைவிட்டு வெளியேறியுள்ளார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

## கம்பன் கலைக்கழகம்

19-4-64 ஈழநாடு ஆசிரியர் தலையங்கத்தில் இலங்கையில் கம்பன் நாமமுடைய கழகம் எதுவும் இல்லை என்று எழுதப்பட்டிருந்தது. அதனைக் கண்டு மிகவும் வருந்துகிறோம். கம்பன் கலைக் கழகத்தை கடந்தஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று அங்குரார்ப்பணம் செய்து நடாத்தி வருகிறோம்.

எமது கழகம் கடந்த வருடம் ஆவணி மாதம் சிலப்பதிகார விழாவையும், கார்த்திகை மாதத்தில் மூவர் நினைவு தின விழாவையும், மார்கழி மாதத்தில் மிருதங்க அரங்கேற்றம் ஒன்றையும் சிறப்புற நாடத்தியுள்ளது.

வெகு விரைவில் கம்பன் விழாவை மிக விமரிசையாக நடாத்தத் தீர்மானித்துள்ளோம்.

ஆ. கு. சிவபாலசுந்தரம்பிள்ளை
(தலைவர்)
கம்பன்கலைக் கழகம்,
பழை-வீமன் காமம்,
தெல்லிப்பழை.

## காணிபெற வாய்ப்பு

'சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு இருந்து வரும் மிகவும் முக்கியமான பிரச்னைகளில் நிலப்பிரச்னையும் ஒன்றாகும். சமீபத்தில் கொடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் ஒரு சிலருக்கு காணிபெறும் வாய்ப்புகள் இருந்த போதிலும், பெரும்பகுதியான நிலமற்றவர்கள் காணிபெற முடியவில்லை. எனவே, இப்போது வவனிக்குளம், அக்கராயன் குளம், கரியாலை நாகபடுவான், கோட்டைக்குளம், ஆகிய பகுதிகளில் உள்ள குடியேற்றத் திட்டங்களுக்கு, விண்ணப்பங்கள் கோரப்படுகிற படியால், நிலமற்ற சிறுபான்மைத் தமிழ் மக்கள் தவறாமல் விண்ணப்பிக்கும்படி கோருகிறோம். யாழ்ப்பாணம் 141, பாங்சால் வீதியிலுள்ள எமது காரியாலயத்திலிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் முடிவு திகதி 11-5-64 என அறிவிக்கப்பட்டுள்ளது.

கே. நடராசா,
இணைச்செயலாளர்
மக்கள் முன்னேற்ற மன்றம்.

# "எனது அரசியல் செல்வாக்கு பத்திரிகைகளினுல் சீரழிந்தது"

## பத்திரிகைக் கமிஷன் முன் திரு. நிமால் கருணாதிலகா சாட்சியம்

கொழும்பு, புதன்

"கடந்த இரு பாராளுமன்ற பொதுத் தேர்தல்களிலும் பத்திரிகைகள் மக்களிடையே அதிக செல்வாக்கை பெற்றிருக்கவில்லை. 1956-ம் ஆண்டு காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அரசாங்கத்தைக் கைப்பற்றிய போதும், 1960-ம் ஆண்டு சிறிமா பண்டாரநாயக்கா, ஆட்சியை ஏற்ற போதும், பத்திரிகைகள் மக்களை கவரமுடியாமல் போய் விட்டது.

பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியமளிக்கும்போது திரு. நிமால் கருணாதிலகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இலங்கையில் கடந்த ஒன்பது வருட காலத்திற்கு முன் 1000 பேர்களுக்கு 27 பேர் பத்திரிகை வாங்கினார்கள். நாலு வருடங்களுக்குமுன் 35 பேராக அதிகரித்தார்கள். உலகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மிகக் குறைந்த அளவில் தான் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தற்பொழுது பத்திரிகைகளின் மொத்த விற்பனவு ரூ. 400-00.

எனது அரசியல் செல்வாக்கு பத்திரிகைகளினுல் சீரழிக்கப்பட்டு விட்டது. ஆனுலும் பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்து நடாத்துவதை நான் விரும்பவில்லை. இலங்கையில், எதிர்க்கட்சி எம். பி.களின் வரவு செலவுத் திட்டப் பேச்சுக்களில் ஒன்றையாவது வானெலியில் ஒலிபரப்புவதில்லை. இந்த நிலைமை இப்பொழுதும் தொடர்ந்துநீடித்து வருகிறது. அதிக பத்திரிகைகள் வெளியிடுவதன் மூலம், பத்திரிகை விநியோகத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

# "தமிழன் தமிழனுக வாழ கம்பர் இராமாயணம் செய்தார்"

நல்லூர், வியாழன்

"19-ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள், திண்ணைகள், ஆலயங்கள் எங்கும் கம்ப இராமாயணம் பெருக்கெடுத்தோடியது. வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையின் கந்தபுராண விரிவுரை, பாடம் என்பன மாணவர்களுக்கு தமிழில் ஈடுபாடு கொள்ளச் செய்தன. நாம் சிறிது காலமாகக் கம்ப இராமாயணத்தைப்பற்றிச் சிந்திக்காமல்விட்டு மீண்டும் சிந்திக்க ஆரம்பித்துள்ளோம்" என்று வித்துவான் பொன். முத்துக்குமாரன் யாழ். மத்திய கல்லூரியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கை கம்பன் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு. முத்துக்குமாரன் தொடர்ந்து பேசியதாவது:

நாட்டில் ஆன்ம வளர்ச்சி குறைந்த காலத்தில் சமயப் பெரியார்கள் தோன்றினார்கள். புறவாழ்வு சீர்கேடுற்றிருந்த போது மக்களுக்கு ஒழுங்கு முறைகளைக் காட்ட அரசியல் ஞானிகள் தோன்றினர். அகவாழ்வு மேம்பட தமிழ்ச் சமுதாயம் புதிய கவிஞர்களை உருவாக்கியது.

கற்புக்காக இளங்கோ காப்பியம் செய்தார். பக்திக்கு சேக்கிழார் உதயமானார். தமிழ் மக்கள் நீண்ட காலமாக அந்நிய ஆதிக்கத்தில் அனுபவித்துக்கொண்டிருந்த வாழ்க்கையைவிட்டு தமிழனாக வாழ கம்பர் இராமாயணஞ் செய்தார்.

சமுதாயம், மனிதன், நாடு என்ற மூன்றிலும் அறம் வேண்டும். அன்பாகிய அறம்தான் உயிராக இருக்கவேண்டும். இந்த நோக்கினை வெளிப்படுத்துவதுதான் இராமாயணம். முகாந்திரம் ஈ. பி. இராசையா வாழ்த்துரை வழங்கினர். நிர்வாகிகள் விபரம் வருமாறு:

பொதுத் தலைவர்: நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா, துணைப் பெருந்தலைவர்கள்: செனட்டர் சு. நடேசபிள்ளை, திரு. சி. உ. சோமசேகரம், திரு. கே. பி. ஹரன். செயலாளர்: டாக்டர் எஸ். சிவஞானசுந்தரம்.

தலைமைக்குழு, ஆராய்ச்சிக் குழு, செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இரகசிய. . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களை பிற்பகல் 2 மணிக்கு பஸ்ஸில் செல்லும்படி கூறினார்.

மாலை 6 மணிக்கு கஞ்சத்துறையிலுள்ள திரு. ஓரின் வீட்டிற்கு சென்றோம். எங்களுடைய 'யூனிபோம்களை' மாற்றும்படி அவர் கூறினார். அதன்பின் நாங்கள் பம்பலப்பிட்டிக்கு வந்தோம்.

# சிவியாதெரு சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டி

நல்லூர், வியாழன்
சிவியாதெரு சனசமூகநிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகள் கிரி இல்லம், கந்தையா இல்லம், பொன்னம்பலம் இல்லம் ஆகியவைகளுக்கிடையில் நடைபெற்றன. கீழ்ப்பிரிவுச் சாம்பியனாகச் செல்வன் வ. அபயராசாவும், மத்தியபிரிவுச் சாம்பியனாகச் செல்வன் க. அருணகிரிநாதனும், மேற்பிரிவுச் சாம்பியனாக செல்வன் த. மகேஸ்வரனும் உ. மே. பிரிவுச் சாம்பியனாக செல்வன் செ. தேவராசனும் தெரிவுசெய்யப்பட்டனர். நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாடசாலை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி டாக்டர் அருளம்பலம் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கினர்.

## போட்டி முடிவுகள்

கீழ்ப்பிரிவு: 50 யார் ஓட்டம்- வே. தருமகுலசிங்கம், வ. விஜயராசா, ச. நடேசன், நீளம் பாய்தல்— வ. அபயராசா, ஐ. தர்மகுலசிங்கம், மு. அம்பிகைபாகன். மத்தியபிரிவு: 100 யார் ஓட்டம்— க. அருணகிரிநாதன், வ. அமிர்தலிங்கம், வி. யோகநாதன். 220 யார் ஓட்டம்— வ. அமிர்தலிங்கம், க. அருணகிரிநாதன், வி.யோகநாதன். 440 யார் ஓட்டம்— க. அருணகிரிநாதன், த. கருணாகரன், தா செல்வரத்தினம். நீளம்பாய்தல்— த. கருணாகரன், க. யோகராசா, சி. சந்திரசேன.

மேற்பிரிவு: 100 யார் ஓட்டம்— த. மகேஸ்வரன், வை. பாலசுப்பிரமணியம், ஐ. பரந்தாமன். 220 யார் ஓட்டம்— த. மகேஸ்வரன், கா. தில்லையம்பலம், தா. தேவமதுரம். 440 யார் ஓட்டம்— கா. தில்லையம்பலம், த. மகேஸ்வரன், வை. பாலசுப்பிரமணியம். உயரம் பாய்தல்— ஐ. பரந்தாமன், வ. குணசிங்கம், வ. பரமசாமி. நீளம்பாய்தல்— த. மகேஸ்வரன், வை. பாலசுப்பிரமணியம், ச. நடராசா.

உயர் மேற் பிரிவு: 100 யார் ஓட்டம்— செ. தேவராசன், கனகரத்தினம், ப. நவரத்தினம்: 220 யார் ஓட்டம்— செ. தேவராசன், ம. நவரத்தினம், கா. பீதாம்பரம். 440 யார் ஓட்டம்— ஈா. பத்மநாதன், க. தேவபாலன், கா. பீதாம்பரம். நீளம் பாய்தல்— ப. நவரத்தினம், ஆ. பாலரத்தினம், செ. தேவராசன். உயரம் பாய்தல்— ஈா. பேரம்பலம், க. தேவபாலன், கா. பீதாம்பரம்.

## பெண்களுக்கான போட்டி

கயிறு அடித்து ஓடல்— த. விமலாதேவி, த. கமலாதேவி, இ. சூரியகலா. 75 யார் ஓட்டம்— வை. மீனும்பிகை, யோ. தேவமலர், த. சரோஜினி தேவி. தேங்காய் துருவுதல்— திருமதி பொன்னுத்துரை, திருமதி தாதபிள்ளை, திருமதி ஆசைப்பிள்ளை. 100 யார் ஓட்டம்— திருமதி பொன்னுத்துரை, திருமதி பரமசாமி, திருமதி ஜீவானந்தம்.

# வானொலிநிகழ்ச்சிகள்

## வியாழன் 23-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 தக்பீர், 9-00 ஹஜ்பெருநாள் தொழுகை அஞ்சல்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரைஇசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு — நாடும் நாமும், 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர் நாடகம் — 'மட்டக்களப்பு மாப்பிள்ளை' — எஸ். பொன்னுத்துரை எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை, 10-00 நிலைய ஒலிப் பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 துதிப் பாடல்கள் பாடுபவர் — எம். காதர்கான்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை,

மாலை 5-15 துதிப்படல்கள் — பாடுபவர் எம். காதர்கான், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பக்ரீத் — பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி — வி. துரைசாமி ஐயங்கார் — வீணை, 8-40 குரல் இசை, 9-45 ஷேக்ஸ்பியர் பற்றிய பேச்சு, 9-30 பூட்டான் — நாடும் மக்களும், 10-15 இசைக் கோவை.


BLACK FLAG

பக் கில்லர்

மந்திர சக்தி போன்று

மூட்டைகளை

கொன்று விடுகிறது.




கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்;

ஜாயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,

மக்கலம் ரோடு, கொழும்பு. BKI


# சென்ற வருடத்தில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## சட்டவிரோதமாக வசிப்பவர்கள்

இலாகாவை எதிர்நோக்கியுள்ள பெரும் பிரச்னை சட்டத்துக்கு டிமிக்கி கொடுத்துக் கொண்டு இங்கு தொடர்ந்து வசித்துவரும் இலங்கையரல்லாதவர்களே. இத்தகையவர்களில் அனேகமாக ஒவ்வொருவரும் இலாகாவுக்குத் தாம் கொடுத்த விலாசத்தை விடுத்து வேறு விலாசத்தில் மறைந்து வசித்துவருகிறார்கள். இவர்கள் இங்கு சட்டபூர்வமாக வசித்துவரும் வெளிநாட்டவர்களோடு கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமிருப்பதால் இத்தகையவர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமானதே.

1962-63-ம் வருடத்தில் தற்காலிக வாஸகால பர்மிட் காலாவதியாகி இங்கிருந்த 964 பேர்கள் கைதுசெய்யப்பட்டு மந்திரியின் கட்டளைப்படி நாடுகடத்தப்பட்டார்கள். இவ்விதம் வாஸகால பர்மிட் காலாவதியாகி இங்கு வசிக்கும் இலங்கையரல்லாதவரைக் கைது செய்யக்கூடிய வகையில் அவர் பற்றிய தகவல் தரும் ஒருவருக்கு ஆகக்கூடிய சன்மானமாக ரூ. 50 கொடுக்கப்படும்.

## தடுப்பு நடவடிக்கைகள்

சட்டவிரோதக் குடியேற்றக்காரரை தடுக்குமுகமாக முள்ளிக்குளத்திலிருந்து சுண்டிக்குளம்வரையான 210 மைல் தூரத்துக்கு பாதுகாப்பு படையினர் அமர்த்தப்பட்டுள்ளார்கள். தேடுதல் வெளிச்சங்கள் கரையோரப் பகுதிகளில் ஆங்காங்கு பொருத்தப்பட்டுள்ளன. 24 மணி நேரமும் ரோந்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கடற்படையினர் அதிக வேகமாக செல்லக்கூடிய மின்சாரப் படகு ஒன்றை இவ்வித ரோந்து நடவடிக்கைக்காக வாங்கியுள்ளார்கள். இவர்கள் இதன்மூலம் இப் பகுதியில் நமது கடற்பிராந்தியத்தை ரோந்து சுற்றி வருகின்றனர். சிரேஷ்ட ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவரும் சட்டவிரோத குடியேற்ற தடுப்பு நடவடிக்கைக்கென நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோதக்குடியேற்றக்காரரும் அவர்களது ஏஜண்டுகளும் தமது முயற்சிகளை இன்னும் குறைத்துக்கொள்ளவில்லை. இப்புதிய சூழ்நிலையை எதிர்நோக்க புதுவித உத்திகளை கையாளுகிறார்கள். முன்னர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் பலர் படகில் ஒரே மூறையில் வந்தார்கள், இப்போது மீன்பிடி வள்ளங்களில் ஒருவர் இருவராக வந்திறங்குகிறார்கள். இவர்கள் அனேகமாக உள்ளூர் மீன்பிடிகாரர்களைப் போல் இருப்பதால் வித்தியாசம் கண்டுகொள்வது கஷ்டமான காரியமே.

இலங்கையின் மற்றப் பகுதிகளிலும் சட்டவிரோதகுடியேற்றக்காரரைக் கண்டுபிடிப்பதில் பொலிஸாரும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். இந்த சமயத்தில் ஒன்றை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இலங்கை பிரஜைகளின் தேசாபிமானம் பற்றியதே அது. பொலிசார் அல்லது சம்பந்தப்பட்ட இலாகாவினர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் சம்பந்தமாக விசாரணை நடத்தும் சமயத்தில், சட்டபூர்வமான இலங்கை பிரஜைகள் தமது சொந்த நலன் கருதியோ அல்லது தாம் தனி நபருக்கு உதவி செய்கிறோம் என்ற தவறான எண்ணத்திலோ, சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எனச் சந்தேகிக்கப்படுபவர் இந்த நாட்டின் சட்டபூர்வமான பிரஜை என அடையாளம் கூறமுன்வருகின்றனர். பல சந்தர்ப்பங்களில் சட்டவிரோதக் குடியேற்றக்காரருக்கு 1948-ம் வருடம் முதல் குறிப்பிட்டவர்களைத் தெரியுமென உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கியிருக்கிறார்கள்.

## அடையாள அட்டை வழங்கும் திட்டம்

இலங்கைப் பிரஜைகளைப் பதிவு செய்து வயதுவந்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவது நல்லதொரு திட்டமென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான நகல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான மான்யமும் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'1949-ம் வருடத்திய இந்திய—பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டத்தின் 3-ம் இலக்கப் பிரிவின்கீழ் இலங்கை பிரஜா உரிமை கோரி மனுச் செய்த 237,034 மனுக்களில் இரண்டைத் தவிர மற்றெல்லாம் நிராகரிக்கப்பட்டன. 1963-ம் வருடம் செப்டம்பர் 30-ம் திகதிவரை இச்சட்டத்தின்கீழ் 133,914 பேர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டார்கள்' என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முருகன் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், புதன்
பண்ணாகம் ஸ்ரீ முருகன் மாணவ கோஷ்டிக்கும் தொல்புரம் கென்னடி கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற தாச்சிப் போட்டியில் ஸ்ரீ முருகன் கோஷ்டி வீரர்கள் வெற்றி பெற்றார்கள். தாச்சிப்போட்டி வழக்கம்பரை சனசமூக விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. ஸ்ரீ முருகன் கோஷ்டியினர் 22 பழங்களையும் கென்னடி கோஷ்டியினர் இரண்டு பழங்களையும் பெற்றனர்.

# பண்டத்தரிப்பு வெற்றி

பண்டத்தரிப்பு, புதன்
பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகத்துக்கும், சில்லாலை கிறிஸ்தவ வாலிபர் சங்க விளையாட்டுக்கழகத்துக்குமிடையே சில்லாலையில் நடைபெற்ற கைப்பந்தாட்டத்தில் பண்டத்தரிப்பு விளையாட்டுக்கழகம் 14-8, 14-10 புள்ளிகளினால் வெற்றியீட்டியது. பண்டத்தரிப்புக் கோஷ்டிக்கு தலைமை தாங்கிய திருவாளர்கள். கே. நடராசா, தி.வ.அரியரத்தினம், இலட்சுமணசாமி, மேரி யோசெப்பு ஆகியோரும் சில்லாலைக் கோஷ்டி சார்பில் திரு. வேதநாயகமும் திறமையாக ஆடினர்.

# லண்டன் சென்றார்

சுழிபுரம், செவ்வாய்
பண்ணாகம் தெற்கைச் சேர்ந்த திரு. க. அண்ணாமலை லண்டனில்சட்டப்படிப்புபடிப்பதற்கு கப்பலில் பயணமானார். இவர் களுத்துறை கிறிஸ்தவக் கல்லூரி விரிவுரையாளராகவும் சுழிபுரம் கலைமன்ற ஸ்தாபகராகவும் பணியாற்றினர்.

# இந்தியாவிலிருந்து உப்பு

கொழும்பு, புதன்
20,000 தொன் உப்பு இலங்கைக்கு இந்தவார இறுதியில் வரவிருக்கிறது.

இதில் பெரும் பகுதி தென் இந்தியாவிலிருந்து வருமென அறிவிக்கப்படுள்ளது.


## வரி விளம்பரம்

யாழ்ப்பாண சுகாதார சேவை கூட்டுறவுச் சங்க அங்கத்தவரும் புங்குடுதீவு வைத்தியசாலையில் கடமை புரிபவருமாகிய நீ. அன்னபூரணியின் தந்தை சென்ற 20-4-64 திங்கட்கிழமை பி. ப.காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் 21-4-64 பி. ப. செவ்வாய்க்கிழமை மணல்காடு மயானத்தில் நடைபெற்றன.

இ. செல்லத்துரை,
334 ம. ச. தலைவர்.

## தொயவு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பேரங்கள் அடங்கிய கற்றலாக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி' யாழ்ப்பாணம்.

## யாழ். கலாக்ஷேத்திரம்

1/5,கேசாவில் பிள்ளையார்வீதி, யாழ்ப்பாணம்.

டி கலாக்ஷேத்திரத்தில் பரதநாட்டியம், கதக்களி, வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. சேர விரும்பும் மாணவர்கள் தயவு செய்து மேற்காட்டிய முகவரியில் தொடர்பு கொள்ளவும். வ. கிருஷ்ண பிள்ளை, காரியதரிசிக்காக. 252


# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுவதில்லை என்றார் அன்பர். ஏனென்று கேட்டதற்கு குடிப்பழக்கத்துக்கு உட்பட்டவர்கள் எப்படிப் பேசமுடியுமென்று திருப்பிக் கேட்டார் அவர்.

இங்கு பேப்பர்காரர்களும் இதைப்பற்றி ஒரு தலையங்கமும் எழுதுவதில்லை. காரணம் விளக்கவேண்டுமா? பிறருக்கு நல்வழி காட்டவேண்டிய தலைவர்களும், பத்திரிகைக் காரர்களுமே இப்படி இருந்தால் சமூகமும் நாடும் எப்படி உருப்படும்?

* * *

விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணும் நிலனும், திரிதரு வாயு வல்லர்செறு தீயுமல்லர்தெளி நீருமல்லர் தெரியில், அரிதரு கண்ணி யாளை ஒரு பாகமாக அருள் காரணத்தில் வருவார், எரியர பார மார்பார் இமையாரும் அல்லர் இமைப்பாரும் அல்லர் இவரே.

—திருநாவுக்கரசர்.

# உணவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன்ஸ் நிலயத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

திரு. ஆழ்வாப்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:

உத்தரவாதவிலைத் திட்டத்தின் கீழ் 1952-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் நெல் ரூ. 12 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதே விலை பின்னரும் தொடர்ந்து வந்துள்ளது. இது விவசாயிகளுக்கு வருமானத்தையும் தேடித் தந்துள்ளது.

அரசாங்கம் உணவுப் பொருட்களைப் பெற்று பொது மக்களுக்கு விநியோகிப்பதில் முன் எப்போதுமில்லாதபடி இப்போது அதிக நஷ்டமடைந்து வருகிறது. ஒரேயடியாக இந்த மான்யத்தை நிறுத்திவிடவும் முடியாது. நாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இந்த மான்யம் சில குறிப்பிட்ட அளவுக்குள் வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# உணவு விநியோகத்தால் ரூ. 45 கோடி நஷ்டம்

## ஆழ்வாப்பிள்ளை கூறுகிறார்

கொழும்பு, புதன்

'ஜனத்தொகை வேகமாக அதிகரித்தும் கைத்தொழில் துரிதமாக அபிவிருத்தியடைந்தும்வரும் இலங்கை உணவு விநியோகத்தில் ரூ 45 கோடி நஷ்டப்பட்டுள்ளது. இலங்கை போன்ற ஒரு நாட்டுககு இது மிக்க ஆபத்தையே விளைவிக்கும்.

அமெரிக்காவும் ரஷ்யாவுமே இவ்வித நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.'

இவ்வாறு உணவு அமைச்சின் முன்னை நாள் நிரந்தரக் காரியதரிசியும் பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் தலைவருமான திரு. கே. ஆழ்வாப்பிள்ளை 'இலங்கை உணவு உற்பத்தியின் சில அம்சங்கள்' எனும் பொருள்பற்றி இலங்கை சார்ட்டட் அக்கவுண்

(5-ம் பக்கம் பார்க்க)

# இன்று

சாவகச்சேரி சந்திரசேகர வாரி வனநாத சிவன்கோவில் முன்றலில் நடைபெறும் தென்மராட்சி இசைககலைமன்ற இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

மாலை 6-30 திருமதி கமலம் மகாலிங்கம் — பாட்டு, 7-00 திரு. எஸ். கணபதிப்பிள்ளை — பாட்டு, 8-00 திருமதி பூமணி இராசரத்தினம் — பாட்டு, 9-00 தலைமையுரை — நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. சி., 9-15 மதுரை ஜி. பழனிவேல் — பாட்டு, 10-30 நாதஸ்வர, தவில் கச்சேரி.

# அராலி கொலை வழக்கு: எதிரிக்கு 6 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், வியாழன்

அராலி கொலை வழக்கில் கைமோசக் கொலை புரிந்ததாக ஒப்புக்கொண்ட எதிரிக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி. நேற்றுக்காலை ஆறு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

"உமது கோபத்தை கட்டுப்படுத்தாவிடில் இன்னும் அதிக கஷ்டத்திற்குள்ளாவீர்" என்று தீர்ப்பளிக்கும் போது நீதியரசர் எதிரியிடம் தெரிவித்தார்.

எதிரியின் சிறந்த குணங்கள் பற்றி அராலி மேற்கு கிராம சேவகர் சாட்சியமளிப்பதற்காக நேற்றுவரை அவகாசம் கொடுக்கும்படி கேட்ட எதிரியின் வழக்கறிஞர் தாம் கேட்டுக்கொண்டதை நிறைவேற்ற முடியவில்லை யென்றும் எதிரி வாலிப வயதுடையவராக இருக்கிறாரென்றும் அவர் மீது கருணை காட்டும்படியும் கூறினார். இதைத்தொடர்ந்து முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. ஏ. டி. சில்வா எதிரி ஏற்கனவே ஒரு முறை சடுதியாக ஏற்பட்ட கோபத்திலை படுகாயம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐம்பது ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்தார் என்பதை நீதியரசருக்கு எடுத்துக் காட்டினார்.

இவ்வழக்கில் அராலி மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை குமாரசாமி அதே ஊரைச் சேர்ந்த முருகேசு வீரசிங்கம் என்பவரைக் கத்தியால் குத்தி 1963 ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் திரு. எஸ். வல்லிபுரத்தின் அனுசரணையுடன் ஆஜரானார் முடிக்குரிய தரப்பில் திரு ஏ. ஏ. டி. சில்வா ஆஜரானார்.

"காமன்வெல்த்

# பிரதமர்கள் மகாநாட்டில் நான் கலந்துகொள்வேன்" —நேரு

புதுடில்லி, ஏப். 22

அடுத்த ஜூலை மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொள்ள இயலும் எனத் தாம் நம்புவதாய் பிரதமர் நேரு அறிவித்திருக்கிறார்.

இந்த மகாநாட்டுக்கான அழைப்பைத் தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாயும் திரு. நேரு கூறினார்.

தற்போதைய பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் அரசாங்கம் தமது பதவிக்காலத்தின் இறுதியில் காமன்வெல்த் பிரதமர்கள்மகாநாட்டை நடத்துகிறது. இவ்வாண்டு இறுதியில் பிரிட்டனில் பொதுத்தேர்தல் நடைபெறவிருப்பதாலும், இத்தேர்தலில் தாம் வெற்றிபெறக்கூடும் எனக் கருதுவதாலும் மகாநாடு ஜூலையில் நடைபெறுவதை பிரிட்டிஷ் தொழிற்கட்சி அவ்வளவாக விரும்பவில்லை எனத் தெரிகிறது. தேர்தல்முடிவுக்குப்பின் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு ஒன்று நடத்தப்படுவதையே தொழிற்கட்சி ஆதரிப்பதாகத் தெரிகிறது

—

புதுடில்லி, ஏப். 22

கடந்த 1962 முதல் இதுவரை 800 பாகிஸ்தானியர் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்திருப்பதாயும் இதில் 260 பேர்கள் திருப்பியனுப்பப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.


றீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m.

Morning Shows

Sats. & Suns. at 10-30 a. m.

LANA TURNER

IN

BY LOVE POSSESSED

(Eastman Colour)

Coming on 1-5-64

TOKYO BY NIGHT


# ஐ. நா. கூட்டம் ஒத்திவைப்பு

நியூயோர்க், ஏப். 22

செப்டம்பர் 15-ம் திகதி கூடவிருந்த ஐ. நா. பொதுச்சபையின் அடுத்த கூட்டத்தை நவம்பர் 10-ம் திகதிக்கு யுதாண்ட் ஒத்திவைத்திருக்கிறார். நடுநிலைமை மகாநாடு அக்டோபரில் நடைபெறவிருப்பதாலும் ஐ. நா. அங்கத்தினர்களில் பாதிப்பேர் இதில் கலந்துகொள்ளவிருப்பதாலும் ஐ நா. சபை ஒத்திவைக்கப்பட்டது.

## சிரமதான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர்களுக்கான சாப்பாட்டு வகைகள் கொடுத்து உதவியுள்ளனர். மேலும் மேலும் உதவி கொடுக்க வென்னும் பலர் சிரமதான வேலையின் மகத்துவத்தை உணர்ந்து முன்வந்துள்ளனர் என்றும் அமைப்பாளர்களுள் ஒருவர் நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

சிரமதான வேலைகளைத் தகவல் பகுதியினர் நேற்று திரைப்படம் பிடித்துச்சென்றனர்.

## பஸ் விபத்து மாண்டவர் தொகை ஏழாக அதிகரிப்பு

கொழும்பு, புதன்

யாத்திரிகர்களை ஏற்றி வந்த ஒரு பஸ் ஹபரதுவைக்கருகிலுள்ள ஏரியில் விழுந்து விபத்துக்குள்ளானதில், மாண்டவர்களின் தொகை இப்பொழுது ஏழாக அதிகரித்துள்ளது. காயமடைந்த 42 பேரில், நால்வரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் சண்டை

நிக்கோஸியா, ஏப். 22

சைப்பிரஸின் கிழக்குப் பகுதியிலுள்ள கிராமங்களில் இன்று புதிதாக துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு ஐ. நா. சமாதானப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

## பஞ்ச் மறுப்பு

நியுயோர்க், ஏப். 22

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என ஐ. நா. உதவிக் காரியதரிசி டாக்டர் பஞ்ச் கூறியிருப்பதாய் பாகிஸ்தான் ரேடியோ ஒலிபரப்பிய செய்திக்கு டாக்டர் பஞ்ச் மறுப்புத் தெரிவித்தார். தாம் அவ்வாறு ஒரு போதும் குறிப்பிடவில்லை என டாக்டர் பஞ்ச் குறிப்பிட்டார். சைபிரஸ், காஸா, காஷ்மீர் ஆகிய இடங்களுக்கு அவர் சென்றிருந்தார்.

வடபகுதி அஸைஸ்

# கல்விழான் கொலை முயற்சி வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

"நீர் ஒரு அதிர்ஷ்டசாலி. இச்சம்பவம் பற்றிய கண் கண்ட காட்சிகள் இருக்கும் பொழுது, நீர் குற்றவாளியல்லவென்று வேண்டுமென்றே பிழையான தீர்ப்பை ஜூரர்கள் 6 பேர் கொடுத்துள்ளனர். பயிற்றப்பட்ட நீதிபதிகள் இவர்களின் இடத்திலிருந்து தீர்ப்புக்கொடுத்திருந்தால் உம்மைக் குற்றவாளியாகக் கண்டிருப்பார்கள். இதனாலேயே ஜூரி முறையில் வழக்குகள் விசாரணைசெய்வதை நான் எதிர்த்துவந்திருக்கிறேன். என் முன் இதுவரை ஜூரர்களால் கொடுக்கப்பட்ட ஒருசில மாறுபாடான தீர்ப்புக்களுள் இதுவுமொன்றாகும். இவ்வித மாறுபாடான தீர்ப்புகளுக்கு யாழ்ப்பாணத்தில் குறைவில்லை. ஜூரர்களின் முடிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய நேர்மையான தீர்ப்பல்ல."

கல்விழான் கொலை முயற்சி வழக்கில் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கும் போது, நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ ஸி. எதிரியைப் பார்த்து மேற்கண்டவாறு கூறினார்.

வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் கல்விழான் கொலை முயற்சி வழக்கு தொடர்ந்து ஐந்து தினங்களாக நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் எதிரிகுற்றவாளி அல்லவென ஜூரர்களில்6பேர் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் துனுக்காய்ப் பகுதியிலுள்ள கல்விழானில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி கந்தையா கனகரத்தினம் அல்லது ராசன் என்பவர், கந்தன் பசுபதியை சுட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் திரு. ரி.கணேசலிங்கம் திருவாளர்கள் வி. செல்லத்தம்பி, வி. கதிரவேலு ஆகியோர்களின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக திரு. எஸ். அமிர்தலிங்கம் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டி. சில்வா ஆஜரானார்.

## பிரதமர் ஜி. ஜி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வதற்குக் கட்சி தயாராகவிருப்பதாக டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இன்று காலை தெரிவித்தார். தாங்கள் இதுவரையும் அரசாங்கத்துடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

திரு. லெஸ்லி குணவர்த்தன, திருமதி விவியன் குணவர்த்தன, செனட்டர் சந்திரா குணசேகரா ஆகியோரும் நிதி மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின, சுகாதார மந்திரி ஜனப் பதியுதீன்மாமூத் ஆகியோரும் நுவரேலியாவிலிருக்கின்றனர். கூட்டு அரசாங்க அமைப்புபற்றிமந்திரிகளுடனும் இடதுசாரித் தலைவர்களுடனும் சென்ற சிலதினங்களாகப் பிரதமர் தனித்தனியாக ஆலோசனை நடத்தி வருவதாக அறியப்படுகிறது.

### கொள்கைத்திட்டம்

கூட்டுஅரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் அமைய வேண்டுமெனப் பிரதமர் வலியுறுத்துவதாகவும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கொள்கை அடிப்படையில் அமைய வேண்டுமென இடதுசாரித் தலைவர்கள் வற்புறுத்துவதாகவும் இதுதான் கூட்டுஅரசாங்க அமைப்பு தாமதமாவதற்குக் காரணமென்றும் கூறப்படுகிறது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் வலதுசாரிக்கோஷ்டி எம். பி.க்கள் சிலர் நுவரேலியாவுக்குச் சென்று பிரதமரைச் சந்தித்துக் கூட்டு அரசாங்கத்தை தாம் எதிர்க்கவில்லையென்றும் ஆனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கை அடிப்படையிலேயே கூட்டு அரசாங்கம் அமையவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும் அறியப்படுகிறது.

மேமாதம் 9-ந் திகதி அரசாங்கக் கட்சியின் கூட்டம் நடைபெற விருப்பதாகவும் இக்கூட்டத்தில் கூட்டு அரசாங்கம் அமைப்பது பற்றி இறுதி முடிவு செய்யப்படுமென்றும் அறியப்படுகிறது. இக்கூட்டத்தில் கூட்டு அரசாங்க அமைப்பு பற்றி பிரதமர் விளக்கிக்கூறுவாரென்றும் தெரிகிறது.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு

நாகம்மாவின் அன்புக் கணவரும், சிவானந்தம் (பாரிஸ்டர்), சச்சிதானந்தம், செல்வானந்தம் (சிலோன் ஸ்ருடியோஸ்), விபுலானந்தம் (ஆனந்தா சினிமா இங்கிரியா), ஆனந்த மகேஸ்வரி, ஆனந்த ராஜேஸ்வரி, செல்வரத்தினம் ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவபாக்கியம், கே. எஸ். மகேசன் (தினகரன் காரியாலயம்), வயலட் ஆகியோரின் மாமனருமாகிய திரு. மயில்வாகனம் மார்க்கண்டு காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் கொடிகாமம் யோகவாசா இல்லத்திலிருந்து கட்டைபறித்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


வெற்றிகரமான 4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)



எம். ஜி. ராமசசந்திரன்—பி. சரோஜாதேவி நடித்த

பெரிய இடத்துப் பெண்

2வது வெற்றிகரமான வாரம்!

மைலன் (கொழும்பு) நவா (கொம்பனித் தெரு)

மற்றும் 5 திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி

புஷ்பலதா — கருணாநிதி

நடித்த

பணம் பந்தியிலே


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.